**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.78
https://ngmtamil.in/

# கானவர்களின் சமுதாயநிலை

**திருமதி.ஆ.கிரேஸி ஜெனோவா**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை,

பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்

**முனைவர்.ஜா. பூரணி,**

நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

மலைப்பகுதிகளில் தொன்மையான பழங்குடிகளாக வாழும் பழங்குடியினர் தங்கள் பூர்வீகத்திலேயே காலம் காலமாகத் தொடர்ந்து இடப்பெயர்ச்சி ஏதுமில்லாமல் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களை கானவர், புனவர், மலை குறவர், மலை வேடன், மலசர், கொல்லர், வேட்டுவர், கள்வர், குயவர் என்ற பெயர்களில் மலையும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் சிறுசிறு குடிகளாக குழுக்களாக சிற்றூர்களில் குறிப்பிட்ட மக்கள் வாழ்ந்தார்கள். இவர்களே கானவர்கள் என்று அழைக்கப்பட்டனர். குறிஞ்சி, முல்லை இன மக்கள் தேன், கிழங்கு, பழம் முதலிய உணவைச் சேகரித்தார்கள். மலைச் சாரல்களில் தினை, ஐவன நெல் விவசாயம் பார்த்தார்கள். பயிர்களை மேயவந்த காட்டு விலங்குகளை நாய், வில், அம்பு கொண்டு வேட்டையாடினார்கள். புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தார்கள்.

**திறவுச்சொற்கள்**

கானவர்களின் தோற்றம், .இனக்குழு, நிலம், குடியின் இயல்பு, கானவர்களின் தொழில்> வேட்டை, உணவு பழக்க வழக்கங்கள்>

**முன்னுரை**

மக்கள் தாங்கள் வாழ்கின்ற நிலச்சூழலுக்கு ஏற்றவாறு தம் வாழ்வியலை அமைத்துக் கொள்கின்றனர். இது பண்டையக் காலந்தொட்டு இன்று வரைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயற்கையானதொரு தொடர் நிகழ்வு ஆகும். அவ்வகையில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை கானவர்களின் வாழ்க்கையாகும். இவர்கள் சங்க காலத்திற்கு முன்பிருந்தே பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் தோற்றம், வாழ்க்கை மற்றும் தொழில், உணவுமுறை, இருப்பிடம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

**கானவர் தோற்றம்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

சமூக அமைப்பானது அதன் உற்பத்தி முறையைக் கொண்டே தீர்மாணிக்கப்படுகிறது. சங்க காலங்களில் வேட்டுவர் குடியினர், வில் எயினர், வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். குறிஞ்சி நிலத்தில் வாழும் தலைவன் சிலம்பன், வெற்பன், குறவர் என்று இளங்கோ சுட்டுகிறார். குறிஞ்சி நில மக்களின் தலைவர்கள் வெற்பன்இ சிலம்பன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

'ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்

ஆவயிள் வரூஉம் கிழவரும் உளரே" (தொல்.அகத்திணை நூ.967)

என்ற அடிகள் வழியாக முல்லை நிலத்தில் ஆண்களை உணர்த்தும் திணைப்பெயர் ஆயர், வேட்டுவர் என்ற இன மக்களும் இவை போன்ற பழங்குடி இன மக்களும் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தனர் என்பதை தொல்காப்பியர் கூறுகின்றார். குறவர் என்பது நிலத்தின் அடிப்படையில் வழங்கியமையை உணரமுடிகிறது. குறிஞ்சி நிலத்தில் வாழும் பெண்களை,

“குன்றக் குறவையோடு கொடிச்சியர் பாடலும் “(சிலம்பு:25-26)

கொடிச்சியர் என்று சிலம்பில் கூறியமையைக் காணமுடிகிறது.

பெரும்பாணாற்றுப்படை எயினர் கானவர், குறவர், கோவலர், களைஞர் போன்றோரின் வாழ்வியல் நிலைக் களங்களையும் பாணர்களுக்கு கொடையாக உணவளிக்கும் பாங்கினையும் காட்டுகிறது.(1) மேலும், மழவர் (அகம் 131:6), கானவர் (அகம்168:13), வில்லோர் (அகம் 261:14), கொள்ளையர் (அகம்:101:10) எனப் பல்வேறுப் பெயர்களால் அகநானூறு;றுப் பாடல்களில், அழைக்கப்பட்டுள்ளமையையும் அறிய முடிகியறது.(2)

**இனக்குழு சமுதாயம்**

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே

வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள; பெயரே................

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடன்றி அனைத்தும்

அவற்றியல் பினவே"-(தொலகாப்பியம், சொல்லதிகாரம்-166)

ஐந்திணைகள் நிலத்தின் அடிப்படையில் மட்டும் வேறுபடவில்லை. மக்கள், உணவு, உற்பத்தி முறை ஆகியவற்றிலும் வேறுபட்டவை. ஒவ்வொரு திணையிலும் வெவ்வேறு தொழில் செய்யும் குழுக்கள் காணப்பட்டன.

“நடத்தை முறைகளோடு தொடர்புடைய திணைக் கருத்துக்கள் சூட்சுமமான சிந்தனைகளின் விளைவாகத் தோன்றியவையாகக் காணப்படுகின்றன”. “திணை” என்ற சொல்லின் மூலப்பொருளான குடும்பம் குடியிருப்பு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. புல நிலப்பகுதிகளில் நடத்தை முறைகளை விளக்கும் சொற்களாக அவை பரிணமித்த வரலாற்றை குறிப்பிடுகின்றன.”(3) என்று திணையின் அமைப்பினை சிவத்தம்பி கூறுகிறார்.

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே

வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள; பெயரே................

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடன்றி அனைத்தும்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

அவற்றியல் பினவே"-(தொலகாப்பியம், சொல்லதிகாரம்-166)

ஐந்திணைகள் நிலத்தின் அடிப்படையில் மட்டும் வேறுபடவில்லை. மக்கள்> உணவு> உற்பத்தி முறை ஆகியவற்றிலும் வேறுபட்டவை. ஒவ்வொரு திணையிலும் வெவ்வேறு தொழில் செய்யும் குழுக்கள் காணப்பட்டன.

"நடத்தை முறைகளோடு தொடர்புடைய திணைக் கருத்துக்கள் சூட்சுமமான சிந்தனைகளின் விளைவாகத் தோன்றியவையாகக் காணப்படுகின்றன". "திணை" என்ற சொல்லின் மூலப்பொருளான குடும்பம் குடியிருப்பு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. புல நிலப்பகுதிகளில் நடத்தை முறைகளை விளக்கும் சொற்களாக அவை பரிணமித்த வரலாற்றை குறிப்பிடுகின்றன."(4)என்று திணையின் அமைப்பினை சிவத்தம்பி கூறுகிறார்.

**தொல்குடி வேட்டுவர்**

வேட்டுவ குடியினர் பாலை நிலத்தில் (முல்லை,குறிஞ்சி) வாழ்ந்தார்கள்.

'காந்தள் அம் கண்ணி கொலை வில் வேட்டுவர்
செம்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட……………………..
குன்று தலைமணந்த புன்புல வைப்பும்" (பதி30-9-13)

காந்தள் பூவால் தொடுக்கப்பட்ட தலை மாலையினையும், கொலை புரியும் வில்லினையும்; கொண்ட வேட்டுவ குடியினர் செம்மையான கொம்பினையுடைய காட்டுப்பசுவின் இறைச்சியோடு. காட்டிலுள்ள வலிமையுடைய யானைகளின் வெண்மையான தந்தங்களையு;ம் எடுத்துக்கொண்டு> அவற்றைப் பொன்னை உடைய கடைத்தெருக்களில் கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் குன்றுகள் கூடிக்கிடக்கும் புன்புலமாகிய பாலைநில ஊர்களின் மக்கள் ஆவர் என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. வேட்டுவ குடியினர் வேட்டம் (வேட்டை) புரிந்ததை சங்க இலக்கியங்கள் கூறுகிறது. "தலை கோள் வேட்டம் களிறு அட்டு ஆங்கு" இதனால் இவர்கள் கல்வெட்டுகளில் வேட்டைக்காரன் (அ) வேடர் (அ) வேடுவர் என்று அழைக்கப்பட்டனர். முல்லை நிலத்தை ஆண்ட வேட்டுவ குடியினரைப் பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலை> வாகைப் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

"செருமுனை உடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலம் காவலன் இயல்பு உரைத்தன்று "(171.அரச முல்லை)

:பெரும் பகையை வருத்தும் சிவந்த சோதியாற் பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய நிலத்தை (முல்லை) ஆளுகிற காவலன் (வேட்டுவன்) தன்மையை இவ்வரிகள் கூறுகிறது.

"அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும்> அவ் இல்
மடவரால் மகளிர்க்கும் மறம் மிகுத்தன்று" (175.மூதில் முல்லை)

மூதில் முல்லை என்பது புறத்திணைக்குரிய ஒரு துறையாகும். புறத்திணையியல் ஒன்றான வாகைத்திணையில் வரும் துறை. மூதில் என்பது மூத்தகுடி. மூத்த முல்லை குடி. அது மேம்பட்ட குடி ஆகும்.

வேட்டுவ குடியைச் சேர்ந்த பெண்களை (வேட்டுவச்சி) சங்க மற்றும்; காப்பிய கால இலக்கியங்களில் 'மூதிற் பெண்டிர்" "மூதில் மகளிர்" என அழைக்கப்பட்டதாக. (புறம்19-15> 279-2) பாடல் கூறுகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மூதில் மகளிரைப்பற்றி புறநானூறு கூறுகிறது. (புறம்.326>333) முல்லை நிலத்தில் 'சிலைவில் பகழிச் செந்துவர் ஆடைக் கொலைவில் எயினர் தங்கை" (ஐங்-363) தலைவியாக கூறப்படுகிறது.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து….."

(சிலம்புகாடுகாண் காதை: 64-66)

முல்லையும்> குறிஞ்சியும் பாலை வடிவத்தை (படிவம்) எடுத்துள்ளன என சிலப்பதிகாரம் கூறுகிறது. மழை பெய்ததும் இப்பாலை வடிவம் முல்லை> குறிஞ்சி வடிவமாக மாறும். முல்லை பாலையாக மாறும் (அகம்-111) குறிஞ்சி பாலையாக மாறும் (கலித்தொகை 2 வது பாடல்). பாலை வீரர்களின் கொற்றவை நிலை> துடிநிலை என்பன குறிஞ்சியின் ஒரு பகுதியாக குறிப்பிடப்படுகின்றன. (புறத்திணையியல்-4)

**வேடர்கள்**

மக்களின் வாழ்க்கையில் பல்வேறு நெறிகளுக்கும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளுக்கும் தொடர்புகண்டு புதிய ஓர் இலக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் தொல்காப்பியர். சங்ககால வேடர்கள் மலை காட்டுப்பகுதிகளில் சிற்றூர்களில் தங்கள் தொழிலுக்கு ஏதுவான இடங்களில் குடிசைகளில் வாழ்ந்தனர். "வேடர்கள் என்ற சொல் வேட்டையை வாழ்வாதாரமாகக் கொண்டோரைக் குறிக்கும் பொதுச்சொல் (பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் ப.123)[(5)]. வேடர் என்போர் வேட்டையாடுவோர். அவர்கள் கொலைக்கு அஞ்சாத வழிப்பறிக் கொள்ளைகாரர்களுமாவர். ஆநிரைகளைத் திருடுவர். வுழிப்போக்கர்களிடமிருந்து உடைமைகளைப் பறித்து அவர்களது துன்பங்களைக் கண்டு மகிழ்வர். (சுப்ரமணியன்.ப.336> 1986)[(6)] என்று வேடர்களைப் பற்றி சங்க கால வாழ்வியல் நூல் குறிப்பிடுகின்றது.

வளைந்த வில்லையுடைய மறவர்கள் எல்லையில் செல்வோரை அலரும்படி செய்து அவர்களின் பொருட்களை வழிப்பறிச் செய்ததை

"இருஞ்சிறை வுளை வாய்ப பருந்தின் வான் கட்பேடை……

கடுந்துடிக் கொடு வில் எயினர்" (அகம்127:15-17)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**கானவர் குடியின் இயல்பு**

இவர்கள் வாழ்ந்த ஊர் சிறுகுடி என்றும் குறிச்சி என்றும் பெயர் பெறும். இதனை>

"மலை விளையாடும் குன்றுசேர் சிறுகுடி" (குறுந்:108:1)

என்று குறுந்தொகையின் பாடலில் வெளிப்படுவதைக் காணலாம். குறிஞ்சி நிலத்து ஊர்களைச் சிறுகுடி> பாக்கம் என்று அழைத்தனர். மேலும்,

"தீயின் அன்ன ஒண் செங்காந்தள்…." ( மலைபடு:145-151)

காந்தள் பூ சிவப்பு நிறத்தில் பூத்திருந்தது. அதனைப் புலால்-கறித்துண்டு என்று கருதி எடுத்துச் சென்ற கழுகு உண்ணாமல் உதிர்த்தது. அவை அகன்ற பாறைகளில் விழுந்து நெருப்புப் பிழம்புகள் போலக் கிடந்தன. மணலில் உதிர்ந்தவை மணல் பரப்பிக் கொண்டிருந்தன. முருகனை வேண்டி வெறியாடிய களத்தில் புலவுத் துண்டுகள் ஆங்காங்கே கிடக்கும். அதுபோலக் காந்தள் பூக்கள் பாறைமேல் பூத்துக்கிடந்தன.

வேட்டையில் கிடைக்கும் உணவுகள்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

“தேனினர் கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்

சிறுகண் பன்றி பழுதுளி போக்கி" ....(மலைபடு:155-159)

கானவர் சிறுகுடியில் தேனும் கிழங்கும் பெறலாம். அங்குள்ள கானவர் யானைத் தந்தத்தில் இருபுறமும் உறி கட்டி உணவுப்பண்ட வட்டில்களை (வட்டில்-கூடை) தம் இருப்பிடங்களுக்குச் சுமந்து சென்றனர். தேன்> கிழங்கு> புலால் முதலானவை அவர்கள் சுமந்து சென்ற உணவுப் பொருட்களாகும். அதில் காட்டுப் பன்றிக் கறியும் இருந்தது. அந்த உணவுப் பொருள்களை அங்குச் சென்றவர் தம் சுற்றத்துடன் சேர்ந்து உண்ணும் அளவுக்கு அவர்கள் விருந்தாகப் படைப்பர்.

”புலத்துப்புனிறு போகிய புனஞ்சூழ் குறவர்

உயர்நிலை இதண மேறிக் கைபுடையூஉ

அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்

பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்” (மலைபடு பா:203-206)

என்ற மலைபடுகடாம் பாடல் வரிகள் உணர்த்துகிறது. முல்லை நிலத்துக் குறவர்கள் தாம் வேட்டையாடிய உடும் பிறைச்சி> கடமானிறைச்சி> பன்றியிறைச்சி முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர்.

**கானவர்களின் தொழில்**

குறிஞ்சி நிலத்தின் உற்பத்தி முறையானது இயற்கை சார்ந்ததாகக் காணப்படுகின்றது. இவர்களது உணவாகத் தேன்> கிழங்கு வகைகள்> இறைச்சி ஆகியவை குறிப்;பிடப்டுகின்றன.

“இல்அடு கள்இன் தோப்பி பருகி

மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி” (பெரும்.143-144)

என்னும் வரிகள் அரிசிக்கள் மற்றும் ஆட்டுக்கிடாய் இறைச்சியை உண்டதை கூறுகிறது. அரிசிக்கள் என்பது அரிசியை பதப்படுத்தி அதன்மூலம் உருவாக்கப்படுகின்ற பானம் ஆகும்.

“வேட்டையாடுதல். உணவு சேகரித்தல்> எளிய வேளாண்மை ஆகியவகையான உற்பத்தி முறைகள் குறிஞ்சி நிலம் சார்ந்தவையாக அமைகின்றன.”(7) என்று ஞா.ஸ்டீபன் கூறுகிறார். உழவு செய்யாமல் பயிரிடப்படும் வேளாண்மையே குறிஞ்சிநில உணவு உற்பத்தி முறையாக இருந்தது என்பதை>

“உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே

ஓன்றே> சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே” (புறம்109.3)

என்ற வரி குறிப்பிடுகிறது. பாரியின் குறிஞ்சி நிலத்தைக் குறிப்பிடும் போது அங்கு உழுது விளைவிக்க வேண்டிய தேவை இல்லாத மூங்கில் அரிசி விளையும் என்று கபிலர் கூறுகிறார். இதன் வழி குறிஞ்சி நில வேளாண் முறையின் எளிமையினை அறிய முடிகிறது.

**வேட்டை முறை:**

எயினர்கள் தம் வேட்டை முறைக்கு வில் அம்புகளைக் கருவியாகப் பயன்படுத்தியதை தவிர்த்து சில வேட்டை நுணுக்கங்களையும் கைக்கொண்டனர். உதாரணமாக உடும்புகளை எயினர் விரும்பி வேட்டையாடினர். உடும்பின் தசை சத்துமிக்கது என்று கருதினர். ஊருக்கு அண்மையில் இருந்து உடும்புகளை எயினச்சிறார் பிடித்து வந்த செய்தியை>

“அருமிளை இருக்கையதுவே மனைவியும்

வேட்டைச் சிறாஅர் சேண்புலம் படராது….” (புறம்326:7-15)

என்ற பாடலில் கடத்தற்கரிய காவற்காடு சூழ்ந்த இடத்தின் கண் உள்ள ஊரில் மனைக்கிழத்தி வேட்டுவச் சிறார்கள் நெடுந்தொலைவு செல்லாமல் மடுக்கரையில் பிடித்துக் கொண்டு வந்த குறுகிய காலையுடைய உடும்பினது தசையைப் பெய்து சமைத்த தயிரோடு கூடிய கூழையும்; புதிதாக வந்த வேறு நல்ல உணவுகளையும் பாணருக்கும் அவரோடு வந்த ஏனைய விருந்தினருக்கும் ஒரு சேரக் கொடுத்து உண்பிக்கும் இயலபினர் என்பதைச் சுட்டுகிறது. மேலும்> (பெரும்:130-133) உடும்பின் பொறியலை தம் குடிசைக்கு வந்த விருந்தினராகிய பாணர் முதலியவர்களுக்கு எயினப் பெண்கள் உபசரித்த செய்தியை சங்க இலக்கியங்கள் எடுத்துரைப்பதை உணர முடிகிறது. இப்பாடல் எயினர் சமூகத்தின் வேட்டை நுணுக்கங்களை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது. யானையின் வெண்கொம்புகளை எடுப்பதற்காக கானவர் யானைகள் இயங்கும் வழியில் குழி தோண்டி வைத்திருப்பர் என்பதை>

“வெண்கோடு நயந்த அன்பு இல் கானவர்……..

இருங்களிற்று இனநிரை தூர்க்கும்” (அகம்21: 24-26)

இப்பாடல் அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. மலையில் வாழ்கின்ற கானக் குறவர் தாம் புனங்களை காவல் செய்வதுப் போல புனங்களைப் பாதுகாக்க தங்களின் பருவ மகளிரை அனுப்புதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தினையின் நீ;ண்ட கதிர்களை வளையல் அணிந்திருக்கும் கைகளையுடைய மகளிர் காவல் செய்ததை>

“தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கும்

ஒண்டொடி மகளிர் ( அகம்:388:3-4)

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

**கூடி வாழ்தல்**

சங்க காலத்தில் ஆநிரை கவர்ந்து தம் குடிக்குள் பங்கிட்டுக் கொண்ட வேட்டுவர்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அதைப்போல வணிகக் கூட்டத்தைத் தாக்கி மறித்;துக் கொள்ளை அடித்து கொள்ளையைத் தங்கள் குடிகளுக்கு இடையே பகுத்துக் கொண்டார்கள் என்ற செய்தியை>

“பொருந்தாக் கண்ணேம் புலம்பு வந்து உறுதரச் சேக்குவம்……..” (அகம்167:6-9)

இப்பாடல்வரிகள் வேட்டைப் பங்கீட்டின் பலநிலைகளைப் பேசுகின்றன. வேட்டையாடுதல்> பங்கிடுதல்> பகிர்ந்துண்ணல் பற்றி வியந்து பாடப்பட்டிருப்பது இனக்குழு வாழ்வின் சமூகக் கட்டமைப்பை வெளிப்படுத்துகிறது என்பதை அகநானூற்றின் வழியாக அறிய முடிகின்றது.

. “தேனெய்யொடு கிழங்கு மாறியோர்

மீனெய்யொடு நறவு மறுகவும்" (பொருநர்-214-221)

என்ற பாடலில்> வேடர் தேனையும்> கிழங்கையும் கொண்டு வந்து மதுபானக் கடையில் மாற்றி அதற்கு மாறாக வறுத்த மீன் இறைச்சியையும் மதுவையும் வாங்கி உண்டதையும்> உழவர் கரும்பையும் அவலையும் கொண்டுவந்து கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டு மகிழ்ந்ததையும் மூடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

**சுற்றுப்புறம் காத்தல்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தங்கள் குடிசைகளை ஒட்டிப் பலாமரங்கள் வளர்த்தார்கள். பலாக்கனிகளை குரங்குகளிடமிருந்து காப்பாற்ற மரங்களில் வலை கட்டினார்கள்.

"கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்" (குறுந்தொகை:342:1-3)

பலாக்கனி கவர வந்த யானைகளை ஊரே திரண்டு விரட்டியது. தினை ஐவனக் கொல்லைகளை இரவும் பகலும் காட்டுப்பறவை விலங்குகளிடமிருந்து பாதுகாத்தார்கள். கொல்லைகளில் உயரமான பரண் கட்டி அதில் ஏறியிருந்து> பயிரை மேயவந்த பறவை விலங்குகளை விரட்டினார்கள். பகலில் குறப்பெண்களும்> இரவில் குற ஆண்களும் காவல் காத்தார்கள். ஆண்கள் புலித்தோலைக் கட்டி பயமுறுத்தியும்> பெண்கள் தட்டை என்ற கருவியை அடித்துக் கிளி குருவிகளையும் விரட்டினார்கள். ஆண்கள்> கிணை> கிணைப்பறை> கவன்கல்> கீழ்க்கை> தீப்பந்தம் கொண்டு யானைகளை விரட்டினார்கள்.

**முடிவுரை**

கூட்டமாகக் கூடிவாழ்ந்த இனக்குழு சமுதாயம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்த சமுதாயமாகும்.. பாலை என்பது குறிஞ்சி> முல்லையில் இருந்து திரிந்தவை என்பதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. கானவர்கள் வீரம் நிறைந்தவர்களாகவும்> தினை விதைத்து> வேட்டையாடி இறைச்சியை உண்டு வாழ்ந்ததையும்> தம்மைத் தாமே கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொண்டதையும்> கொடைத் தன்மை மிக்கவர்களாக இருந்ததையும் இலக்கியங்கள்; நமக்கு எடுத்துரைப்பதை நாம் உணர முடிகிறது..

**அடிக்குறிப்புகள்**

1. பெரும்பாணன் பயணமும் திணைசார் இனக்குழு சமுதாயமும்.
2. அகநானூற்றில் குடிவழி சமூகம்> பிரணவ் தமிழி;யல் ஆய்விதழ்> ப.2
3. கார்த்திக்கேசு சிவத்தம்பி> புண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி> பக. 42> மக்கள் வெளியீடு-2003> சென்னை
4. மேலது.
5. ராஜ் கௌதமன் பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் ப. 198> சுப்ரமணியன்> சங்க கால வாழ்வியல்> நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்
6. சுப்ரமணியன்> சங்ககால வாழ்வியல்> நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.
7. (ஞா.ஸ்டீபன் இலக்கிய இன வரைவியல்> ப.61> நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்> சென்னை> அக்டோபர்.2017)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**துணை நூற் பட்டியல்**

[1.] சங்க இலக்கியம் மூலமும் உரையும்>சு வே. சுப்ரமணியன்>

[2.] மணிவாசர் பதிப்பகம்> சென்னை> முதற் பதிப்பு ஜுன் 2010

[3.] அகநானூற்றில் குடி வழி சமூகம்> பாரத் உயர்கல்வி(ம)ஆராய்ச்சி நிறுவனம்> சென்னை மற்றும் சங்க இலக்கியம் அகநானூறு மூலமும் உரையும்> தொகுதி-1>2 பாவை பிரிண்டர்ஸ்(பி) லிட்> சென்னை.

[4.] சங்க இலக்கியம் மூலமும் உரையும்> சு .வே. சுப்ரமணியன்> மணிவாசர் பதிப்பகம்> சென்னை> முதற் பதிப்பு ஜுன் 2010

[5.] தொல்குடி வேட்டுவர் வரலாறு> (Maanthapadai vettuvar,Saturday,August25,2018)

[6.] (சிலம்பு சு;டும் குறிஞ்சி மக்களின் வாழ்க்கை- முனைவர்.மூ.சிந்து. என்பி.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி). கோயம்புத்தூர். ஆய்வு:10மார்ச்2021.)

[7.] (குறிஞ்சி நிலமக்களின் வாழ்வியல். ஜான்சி ராணி>மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்> சென்னை-8)

[8.] ராஜ் கௌதமன் பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் ப. 198>தமிழினி பதிப்பகம்> சென்னை.

[9.] ராஜ்கௌதமன்> பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும்> காவ்யா பதிப்பகம்பிரணவ் தமிழியல் ஆய்விதழ்>

[10.] அகநானூற்றில் குடிவழிச் சமூகம்> முனைவர். து. கிறிஸ்டல்ரெஜி> பாரத் உயர்கல்வி(ம) ஆராய்ச்சி நிறுவனம்> சென்னை. ISSN:2582-9599 OCT-2022

[11.] பக்தவச்சல பாரதி> பண்பாட்டு மானிடவியல்> மணிவாசர் பதிப்பகம்> சென்னை-1980

[12.] சிலப்பதிகார விளக்கம்> ரா.பி.சேதுபிள்ளை> சென்னை 1927

[13.] (பக்தவச்சல பாரதி> பாணர் இன வரையியல்> ப.21.அடையாளம்> பதிப்பகம்> திருச்சி2015)